# VALVAI SEAMEN WELFARE ASSOCIATION

Vembady, Valvettithurai.

## வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

வேம்படி, வல்வெட்டித்துறை, இலங்கை

Email : vaiswavvt@gmail.com
Web : Valvaimalumikal.com

செயலாளர் : 0778223632 Reg.No. DS/VAD/N/SS/VOR/2012/57


# வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் (VaiSWA)
# ஆண்டறிக்கை - 2017

கடந்த ஆண்டு (2017) எமது சங்கச் செயற்பாடுகளை நோக்குமிடத்து மாலுமிகளின் நலனிற்கான செயற்பாடுகள் இல்லையென்றே சொல்லலாம். அதற்கு ஒரு சில காரணங்கள் இருந்த போதிலும் எமது இளைஞர்களின் ஈடுபாடும் போதுமானதாக இருந்திருக்கவில்லை என்பதும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

வர்த்தகக்கப்பல் துறையானது தற்சமயம் (Containers) கொள்கலன்கள் மூலமானது அதுவும் சீனக்கப்பல்களின் ஆக்கிரமிப்புக்குள் சென்று கொண்டிருக்கின்றமையாலும் இதனால் தனியார் கப்பல் நிறுவனங்கள் அதனுடன் போட்டி போட முடியாத நிலமையும் ஏற்பட்டிருக்கின்றது. இது சீனர் அல்லாத மாலுமிகளின் வேலை வாய்ப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது தவிர எம் ஊரவர்களின் வாழ்வாதாரத்திற்கு பல தசாப்தங்களாக வழி ஏற்படுத்திக் கொடுத்து வந்த எண்ணெய் வழங்கும் கப்பல் நிறுவனங்களும் (oil Bunkering Companies) எண்ணெய் விலை வீழ்ச்சியின் எதிரொலியாக தமது நிறுவனங்களை இழுத்து மூடிவிட்டன. இதுவும் எம்மவருக்கு தொழில் வாய்ப்பில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இது தவிர மீதி இருக்கின்றதும் தற்சமயம் எம்மவர்கள் வேலை செய்கின்றதும், ஏன் பெரிதும் நம்பியுள்ளதுமான எண்ணெய் வழங்கும் கப்பல் நிறுவனங்களின் ஊதியம் வழங்குவதில் உள்ள இழுபறி நிலமையானது, தொடர்ந்தும் கப்பல் வேலை வாய்ப்பை நம்பியிருக்கலாமா என்ற வினாவை எம்மிடையே எழுப்பியுள்ளது. இன்னும் Cadet ஆக அதாவது பயிற்றுனராகப்படித்து அடுத்து அதற்குத் தேவையான கால அளவு கடல் அனுபவம் (Sea Service) பெறுவதற்கு கப்பல் வாய்ப்பு கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. ஒரு சில எமது இளைஞர்கள் பெரும் பொருட் செலவில் cadet ஆகப்படித்தும் வேண்டிய கடல் அனுபவம் கிடைக்கப்பெறாது வருடக்கணக்கில் விரக்தியுடன் காத்திருப்பதும் கண்கூடு. இதனால் திறமையுள்ள, தகுந்த கல்வித்தகமையுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, தேவைப்பாட்டால் அவர்களிற்குப் பொருளுதவியும் புரிந்து எமது இளைஞர்களையும் அவர் தம்குடும்ப வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலம் எமது ஊரை வளப்படுத்த முனைகின்ற நலன் விரும்பிகள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ளவர்களது ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் இல்லாமல் செய்கின்றது. கப்பல்களில் இருந்து (துறைமுகத்திலிருந்து) இறங்கி நாடுகளில் தஞ்சம் புகுபவர்களின் செயற்பாடுகளும் இன்றும் தொடர்ந்த வண்ணமாகவேயுள்ளது. இதுவும் இருக்கின்ற நல்ல கப்பல் கம்பனிகளிலிருந்து/முகவர்களிடமிருந்து எம்மவரை ஓரங்கட்டத்தவறவில்லை. இது அன்றும் இன்றும் ஓர் சாபக்கேடாகவேயிருந்து வருகின்றது. மேலும் பரீட்சார்த்த ஆள் இல்லாத (Unmanned) கப்பல் ஓட்டம் வெற்றியளித்துள்ளது. இது உடனடியாக நடைமுறைக்கு வரவில்லையென்ற போதிலும் சமகால மாலுமிகளை மாற்றுத் தொழில் ஒன்றிற்கு தம்மைத்தயார்படுத்த வேண்டிய தேவையையும் கூடவே புதிதாக மாலுமிகளாக வர விருப்பங்கள் உள்ளவர்களையும் நடைமுறை யதார்த்தத்தைப்புரிந்து கொண்டு கால விரயத்தை தவிர்த்து மாற்றுக்கல்வி (தொழில் கல்வி) யொன்றை அல்லது தொழிலை தேர்வு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை **எமது சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது**. இருந்த போதிலும் ஒரு சிறு தொகுதியினர் தமது ஆளுமையாலும் விடாமுயற்சியாலும் கப்பல் தொழிற்றுறையில் பிரகாசிக்கின்றனர்என்பதை மறுப்பதற்கும் இல்லை. ஆனால் ஒப்பீட்டளவில் நோக்குமிடத்து இது திருப்திகரமானதாக இல்லை. ஆதலினால் பள்ளி, கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் எமது மாணவர்கள் தமது படிப்பில் முழுக்கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் படித்து அதன் மூலம் வளமான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுப்பயனடையுங்கள் என்று அறிவுறுத்தும் வேளை சமகால எம்மாலுமிகளையும் தாமதியாது மாற்றுத் தொழில்களை நாட ஆரம்பியுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். நடப்பு நிலமையை உணர்த்த வேண்டிய தேவையும், கடமையும் ஏன் பொறுப்பும் எமக்குண்டு. மாற்றங்கள் ஒன்று தான் உலகின் மாறாத நியதி. சரியான புரிந்துணர்வுடனும், விழிப்புணர்வுடனும் கால மாற்றத்திற்கு முகம் கொடுக்கத் தயாராவோம். எமது சங்கச் செயற்பாடுகளாக கடந்த ஆண்டில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. **முத்துமாரி அம்மன் திருவிழாக்கால ஒன்று கூடல் :- (14.05.2017)**

ஆண்டு தோறும் நடாத்தப்படுகின்ற அம்மன் திருவிழாக்கால ஒன்று கூடல் 14.05.2017 அன்று ஓர் இரவுப் போசன விருந்துடன் சிறப்பாக காவல் கோட்டையில் அமைந்துள்ள Capt.N.விநாயகமூர்த்தி அவர்களின் தோட்டத்தில் நடை பெற்றது. எமது முத்துமாரி அம்மனை திருவிழாக்காலத்தில் தரிசிப்பதற்கு புலம்பெயர் தேசங்களிலிருந்து வந்திருந்த எம்மவர்களும், உள்ளூர் மாலுமிகளும், நலன்விரும்பிகளும் கலந்து சிறப்பித்ததுடன் தமது கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர். இந்நிகழ்வின் போது நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள மாற்றுத் தொழிற்பயிற்சிக் கல்வி நெறிமுறை பற்றியும் ஆராயப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பிரபல தொழிலதிபர் திரு. T. மணிவாசகர் அவர்களின் சேவையைப்பாராட்டி எமது சங்கம் 15.09.2015 அன்று ஒரு கௌரவிப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இதன் போதும் திரு. T. மணிவாசகர் அவர்கள் மாற்றுத் தொழிற்கல்வி முறை பற்றி சுட்டிக் காட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றின் பிரதிபலிப்பே எம்மை தொழிற்பயிற்சி கற்கை நெறிகளே எமது இளைஞர் யுவதிகளிடையே அறிமுகப்படுத்தும் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் ஊட்டியது எனலாம். இந்த ஒன்று கூடலின் போது ஆழ்கடல் அதாவது தங்கு கடல் மீன் பிடித்தலின் சாதக பாதகங்களை ஆராயும் பொருட்டு ஐவர் அடங்கிய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது பற்றிய அறிக்கை கிடைக்கப் பெறவில்லை. நடந்து முடிந்த இந்த அம்மன் திருவிழாக்கால ஒன்று கூடலிற்கான நிதியினை எமது நலன் விரும்பிகள் மனமுவந்து அன்பளிப்பு செய்திருந்தார்கள். அதன் விபரம் இந்த ஆண்டு அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கறிக்கையுடன் சேர்த்து வெளியிடப்படுகின்றது.

2. **தொழிற்கல்விக்கான முயற்சி :-**

காலத்தின் நிர்ப்பந்தம் கருதி எமது ஊரின் வளர்ச்சிக்கு தொழிற்கல்வியைக் கொண்டு வரும் முயற்சியில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்கற்கை நெறிகளான

i. **தையல்**

ii. **ICT** என்கின்ற கணினித் தொடர்பாடல் என்கின்ற இரு பெறுமதிமிக்க கற்கை நெறிகளை வல்வை பழைய நகர சபை மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துள்ளோம். ஆறு மாதங்கள் நடாத்தப்படும் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமானதாகும். தையல் கற்கை நெறிக்குத் தேவையான Materials அனைத்தும் இலவசம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் வாரம் (8) எட்டு மணித்தியாலயங்களைக் கொண்ட ஆங்கிலக்கல்வி புகட்டப்பட்டு கற்கை நெறி இறுதியில் NVQ Level 1. சான்றிதழ் வழங்கப்படுவதும், ICT கற்கை நெறியினை நோக்குமிடத்து அதற்கும் தினசரி (02) இரண்டு மணித்தியாலயங்கள் வீதம் வாரத்தில் (08) எட்டு மணித்தியாலயங்கள் ஆங்கிலக்கல்வி புகட்டப்பட்டு கற்கைநெறி இறுதியில் தற்சமயம் பகுதி நேரமாக சனி, ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் பிரத்தியேக ஆங்கிலக்கல்விச் சான்றிதழான NVQ Level 2. வழங்கப்படுவதும் சிறப்பம்சமாகும். இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் இந்த கற்கை நெறிகளை நடத்த குறித்த நகரசபைக்கட்டிடத்தை ஆறு (06) மாதங்களிற்கு இலவசமாக தந்துதவிய வல்வை நகராட்சி மன்றச் செயலாளர் திரு. ச. பிரசாத் அவர்களின் ஒத்துழைப்பை இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டியே ஆக வேண்டும்.

எமது சங்கமானது திரு. ச. பிரசாத் அவர்களிற்கும் கூடவே இவ்விடயத்தில் குறித்த தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ் மாவட்டக்காரியாலய உத்தியோகத்தர்களிற்கும் எமது வல்வைப் பொதுமக்கள் சார்பாக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளது. இந்த இரு முழுநேரக்கற்கை நெறிகளும் இன்னும் இருபதிற்கு மேற்பட்ட தொழில் கற்கை நெறிகளும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன என்பது இங்கு அநேக நமது பெற்றோர்களிற்குத் தெரிந்திருக்கவில்லை .எனவே இது பற்றி எமது பெற்றேரிற்கு விழிப்பூட்ட பத்திரிகை வாயிலாகவும், இணைய தளங்கள் மூலமாகவும் விளம்பரத் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டமையால் இவ்விரு கற்கை நெறிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அத்துடன் பிரத்தியேக ஆங்கிலக் கற்கை நெறியினை ((NVQ, Level 2) (இது கட்டணத்துடன் கூடியது)) இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வட பிராந்தியக்காரியாலயம் முதன் முறையாக எமது வல்வை நிலையத்தில் ஆரம்பித்து வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது பகுதி நேர வகுப்புக்களாக சனி, ஞாயிறு தினங்களில் தலா நான்கு (04) மணித்தியாலயங்கள் வீதம் மொத்தமாக (200) இருநூறு மணித்தியாலயங்களை உள்ளடக்கியது. இந்த ஆங்கிலக்கற்கை நெறியினை (51) ஐம்பத்தொரு மாணவர்கள் கற்று வருகின்றனர். ஆங்கிலக்கல்வியறிவானது அதிலும் பேச்சு ஆங்கிலம் (Spoken English) எமது பகுதி மாணவர்களின் முன்னேற்றத்தில், வேலை வாய்ப்பில் ஒரு பெரிய தடுப்பரணாக இருந்து வருகின்றது. ஆனால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் குறித்த பிரத்தியேக ஆங்கில வகுப்பின் பாட விதானமானது (Syllabus) இந்தக் தடுப்பரணைத் தகர்த்து எமது பிள்ளைகள் முன்னேறிச் செல்வார்கள் என்ற நம்பிக்கையை எமக்கு ஊட்டுகின்றது.

மாணவர்களை ஊக்குவிக்கும் நல்லெண்ணத்துடன் இந்த ஆங்கில வகுப்புக்கான கட்டணத்தின் பெரும்பகுதியை சிவன் அறக்கட்டளை நிறுவனமும் வதிரியைச் சேர்ந்த தொழிலதிபரும் சமூக ஆர்வலருமான திரு. தங்கவேலாயுதம் ஐங்கரன் அவர்களும் தந்து உதவுவதாக உறுதியளித்துள்ளனர். இதனடிப்படையில் நாம் தற்சமயம் தற்காலிகமாக எமது சங்க நிதியிலிருந்து அதனைச் செலுத்தி உள்ளோம். இது தவிர நாமும் எமது பங்காக தேவை கருதி ரூபாய் 63750 வழங்கியுள்ளோம். இதனால் இதில் படிக்கும் ஒரு மாணவன் 6750 ரூபாய் கட்டணக் கற்கை நெறியினை 3000 ரூபாயுடன் படிப்பதற்கு ஏதுவாகின்றது. இதனால் பெற்றோரின் சுமையும் குறைக்கபட்டுள்ளது. இந்த நிதி உதவித் தொகையானது எந்தவித பாகுபாடுமின்றி அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தையல், ICT, ஆங்கில வகுப்புக்கள் என இவை மூன்றிலுமாக மொத்தம் 86 மாணவர்கள் கற்றுப் பயனடைந்து வருகின்றனர் என்பது ஒரு மகிழ்ச்சியான விடயமாகும். அடுத்துவரும் ஆண்டுகளில் இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றோம். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புணர்வும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றே. ஆசிரியர்கள் சமுதாயச்சிற்பிகள், அர்ப்பணிப்புணர்வுள்ள இவர்கள் ஆசிரியர் தினங்களில் மாத்திரமின்றி தினமும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

தொடர்ந்தும் அடுத்த ஆண்டிற்கான (2018) ஜனவரியில் ஆரம்பித்த தையல் மற்றும் ICT கற்கை நெறிகளிற்கு விளம்பரங்கள் ஏதுமின்றி அதிக எண்ணிக்கையானோர் விண்ணப்பித்து நேர்முகத் தேர்வில் தெரிவாகி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. தொழிற்பயிற்சி கற்கை நெறியின் பலாபலன் பற்றிய விழிப்புணர்வு எமது மாணவர்களிடையே அதிகரித்துள்ளது ஓர் ஆரோக்கியமான விடயமாகும். எமது பெற்றோரும் மாணவர்களும் தரும் ஆதரவு ஒன்று தான் எம்மை உற்சாகப்படுத்தும், ஊக்கப்படுத்தும் வகுப்புகளிற்கு மாணவர்களது வருகையும் பிரதானமாக நோக்கப்படுகின்றது. இந்த (வல்வை) தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிலையத்தின் வளர்ச்சியும், வெற்றியும், ஏன் சில சமயத்தில் இருப்பும் மாணவர்களது வருகையில் தான் தங்கியுள்ளது என்பதனை கருத்தில் கொண்டு பெற்றோரும், மாணவர்களும் செயற்படுவார்கள் என வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம். அனைவரது ஒத்துழைப்போடும் மேலும் புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதுடன் எமது இந்த கற்கை நெறி நிலையத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக நடாத்துவதுடன் விஸ்தரிக்க வேண்டும் என்பதே எமது சங்கத்தின் பெரு விருப்பாகும்.

தற்பொழுது அடுத்து தொடங்கப்படவுள்ள கற்கை நெறிகள் பற்றி அறிந்து கொள்வதில் மாணவர்கள் பெரும் ஆர்வமாகவுள்ளார்கள் ஆனால் இங்கு எமது வல்வை நிலையத்தில் தொழிற் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு மாணவர்கள் சேர்வது குறைவாகவும் அவர்களைச் சேர்ப்பது சிரமமாகவும் இருந்தது. நடப்பாண்டிற்கான மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையும் எம்மை மேலும் உற்சாகப்படுத்துகின்றது. இந்த கற்கை நிலையத்தை தொடர்ந்தும் பாவிப்பதற்கு ஒரு சலுகைக்கட்டண அடிப்படையில் தந்துதவுமாறு இது தொடர்பானவர்களிடம் கோரிக்கைகளும் முன்வைத்துள்ளோம். வடமாகாண முதலமைச்சர் கௌரவ சி. வி. விக்னேஸ்வரன் அவர்களும் தேவையான உதவியைச் செய்வதாக உறுதியளித்துள்ளார். இது குறித்த விடயத்தில் எமது மாகாண சபை உறுப்பினர் திரு. M.K. சிவாஜிலிங்கம் அவர்களின பங்களிப்பும் எமக்குண்டு.

## 3. மீனாட்சி அம்மன் கோவிலடி வெள்ளைக் கடற்கரை துப்பரவு செய்தல்

எமது மீன் சந்தைக்கு எதிரே அமைந்துள்ள வெள்ளைக் கடற்கரையானது நீச்சல் பழகுவதற்கும் நீந்திக்களிப்பதற்கும் மிகச் சிறந்த இடமாகும். ஆனால் அதிலும் இடையூறாக ஆங்காங்கே சிறு சிறு பாறைகள் காணப்படுகின்றன. அவைகள் அகற்றப்பட்டால் நீச்சல் பரப்பு அதிகரிக்கும் அதனால் விடுமுறையைக் கழிக்க வரும் புலம் பெயர் எம்மவர்களும் உள்ளூர்க்காரர்களும் நீந்திக்களிப்பதற்கும் நீச்சல் தெரியாதோர் நீச்சல் பழகுவதற்கும் வசதியாகவிருக்கும். எனவே நீந்திக்களிப்பதற்கு என்று இனி தொண்டைமானாறு அக்கரை செல்ல வேண்டிய தேவை இருக்காது. எனவே இடையூறாகவுள்ள பாறைகளை அகற்றுவதற்கு இவ்விடயத்தில் மிகவும் தீவிரமாகவிருந்த சமூக ஆர்வலர் திரு. T. வெற்றிவேல் (நோர்வே) அவர்களுடன் சேர்ந்து அதற்குரிய அனுமதியை வல்வை நகராட்சியூடாக பெறும் முன்னெடுப்புகளும் எம்மால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன இதனருகிலேயே நீச்சல் வீரன் அமரர் ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் ஞாபகார்த்த நீச்சல் தடாகம் பல கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**4. பிரதேச செயலக சிறுவர் முதியோர் கௌரவிப்பில் நிதிப்பங்களிப்பு**

வழமை போல இந்த ஆண்டும் பருத்தித்துறை பிரதேச சபையால் சிறுவர் முதியோர் கௌரவிப்பு விழா நடைபெற்றது. அதற்கும் எம்மால் வழமை போல் சிறு தொகையாக ரூபாய் 5000 வழங்கப்பட்டது.

**5.** எமது சங்கச் செயற்பாடுகளிற்கு ஒரு கட்டிடம் நிரந்தரமாகவோ அன்றி வாடகைக்கோ பெறப்பட வேண்டிய தேவை பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான முயற்சியும் தேடலும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

**6.** எமது சங்கத்தின் நிதியிலிருந்து உதவியடிப்படையில் கடன் இருபகுதிகளாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவை நீண்ட காலமாகவே மீளப் பெறப்படாமல் இருந்து வருகின்றது. பல நிர்வாக சபைக் கூட்டங்களில் இது பற்றி விவாதிக்கப்பட்டு குறித்த இருவரிடமும் விபரம் கேட்டு, அவர்கள் கோரியிருந்த கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் பதிவுத் தபால் மூலமாகவும் நேரிலும் மேற்கொள்ளப்பட்டன. கால அவகாசமும் முடிவுற்றது பற்றி பதிவுத்தபால் மூலமாகவும் நேரிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்த 2017 ஆண்டு காலப்பகுதியில் 4 நிர்வாக சபைக்கூட்டங்களும் ஒரு ஒன்று கூடலும் நடாத்தப்பட்டன. நிர்வாக சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அங்கத்தவரின் எண்ணிக்கை திருப்திகரமாக இருப்பதில்லை. கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு பின்னர் சங்க கணக்காய்வாளர் திரு. A. நாகலிங்கம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு சரியென்று ஏற்றுக் கொள்ளப்பட்டு அக்கணக்கறிக்கையும் இந்த ஆண்டறிக்கையுடன் சேர்த்து ஏககாலத்தில் வெளியிடப்படுகின்றது.

நடந்து கொண்டிருக்கின்ற தொழிற்பயிற்சி முழு நேரக் கற்கை நெறிகள் இலவசம் என்ற போதிலும் இதனைத் தொடர்ந்து கொண்டு நடாத்துவதற்கும் மேலும் பல தொழில் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தவும் நலிந்த மாணவ ஆர்வலர்களிற்கு உதவி புரியவும் நிதி தேவைப்படுகின்றது. இருப்பில் உள்ள நிதியைத் தொடர்ந்தும் பாவிப்பது புத்திசாலித்தனமாகாது. எனவே பெரு மனது கொண்டோர் தங்களால் இயன்றளவு பொருளுதவி புரிந்து எமது செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தோழமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். வழமையான மூன்று கற்கை நெறிகளுடன் மேலும்

i. Automobile technician
ii. Engineering technology
iii. Domestic Electrician
iv. Out beat Engine Mechanism

போன்ற கற்கை நெறிகளை எமது நிலையத்தில் நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. எமது சங்கச் செயற்பாடுகளில் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்ந்தும் குறைவாக இருந்து வருகின்றது. இனி வரும் காலங்களில் அவர்களும் எம்மோடு சேர்ந்து பணியாற்ற வருமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம். எமது சங்கச் செயற்பாடுகளிற்கு சகல வழிகளிலும் துணை புரிந்த அனைவருக்கும் எமது சங்கம் இரு கரம் கூப்பி நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது. 03.01.2018 அன்று நடைபெற்ற நிர்வாக சபைக்கூட்டத்தின்போது நடாத்தப்பட வேண்டிய பொதுக்கூட்டத்தை தவிர்க்க முடியாத காரணங்களால் பெப்ரவரி 2018க்கு ஒத்திவைப்பதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் எமது சங்க ஆர்வலர்களும் நலன்விரும்பிகளும் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் தொடர்ந்து நிர்வாகத்தில் பங்கு பற்றும் வெளியிலிருக்கும் செயற்பாட்டாளர்களும் தாங்களும் தொடர்ந்தும் செயற்பட ஆர்வமாக இருப்பதாலும் முத்துமாரி அம்மன் திருவிழாக்காலத்தில் வரும் புலம்பெயர் எமது நலன்விரும்பிகள் முன்னாள் மாலுமிகள் ஆகியோரது கருத்துக்களையும் அறிந்து கொள்ள வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு இறுதியில் 24. 02. 2018 அன்று நடந்த நிர்வாக சபைக்கூட்டத்தில் வரும் அம்மன் திருவிழாக்கால ஒன்றுகூடலுடன் பொதுக்கூட்டத்தையும் நடாத்துவதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நன்றி

..................................
இணைத்தலைவர்
கப்டன் R. இராஜேந்திரா

..........................
செயலாளர்
V.P பாலேந்திரன்

18.04.2018

# வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் (VaiSWA)

## 01.01.2017 இலிருந்து 31.12.2017 வரையான வரவு செலவுக் கணக்குகள்

| திகதி | விபரம் | வரவுகள் | | | செலவுகள் | |
|---|---|---|---|---|---|---|
| 01.01.2017 | ஆரம்ப இருப்பு | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| | வங்கி | 630482 | 31 | | | |
| | காசு | | | | | |
| | வங்கி வட்டி (Jan - 2017 - Dec 2017) | 25380 | 80 | | | |
| 29.05.2017 | திரு.V.ஜெய்சந்திரனிடமிருந்து மீளப்பெற்ற பணம் வைப்பு | 50000 | | | | |
| 18.05.2017 | திரு.த.நரேந்திரன் அன்பளிப்பு செய்த பணம் | 49550 | | 2 | | |
| | **செலவுகள்** | | | | | |
| | வங்கியால் அறவிடப்பட்ட அரச வரி | | | | 1531 | 37 |
| 18.05.2017 | திரு.V.ஜெய்சந்திரனுக்கு உதவியடிப்படையில் கடன் கொடுத்தது | | | 1 | 50000 | |
| 21.07.2017 | வல்வை நகர சபைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிற்கற்கை நெறிகளிற்கு அனுசரணையாளர் என்ற வகையில் செலவுகள் செய்தது. | | | | | |
| | ஆரம்ப செலவுகள் | | | | | |
| | Bathroom Repaires and labour charges(ஒப்பந்த அடிப்படையில்) | | | 3 | 29400 | |
| | ஆங்கில கற்கைநெறி கருத்தரங்கிற்குரிய ஒலிபெருக்கி வாடகை | | | 4 | 2500 | |
| | பிரதேச பணிமனைக்கு சிறுவர் முதியோர் தினவிழாவிற்கு அன்பளிப்பு | | | 5 | 5000 | |
| | தொழிற்பயிற்சி விடயமாக வலம்புரியில் விளம்பரம் | | | 6 | 5500 | |
| | English course விடயமாக bulb (4912) | | | 7 | 750 | |
| 21.07.2017 | நானாவித செலவுகள் | | | | | |
| | Selva Printers A4 size Paper (547) | | | 8 | 200 | |
| | Selva Printers 200 Print Outs (550) | | | 9 | 800 | |
| | Selva Printers Hand bills (1224) | | | 10 | 500 | |
| | Colour print photo copies (1317) | | | 11 | 260 | |
| | Selva Printers - 200 Colour paper print (416) | | | 12 | 750 | |
| | 01 puncher vaiswa36557 | | | 13 | 320 | |
| | Guru printer - colour paper notice (6205) | | | 14 | 1400 | |
| | Guru Printerspaper colour photo copy (6146) | | | 15 | 400 | |
| | N.V.Q. Seminar refreshments | | | 16 | 2000 | |
| | C/F | 755413 | 11 | | 101311 | 37 |

| திகதி | விபரம் | வரவுகள் | | | செலவுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | B/F | **755413** | **11** | | **101311** | **37** |
| 28.11.2017 | Vaiswa website yearly payment (A/C8127006629) | | | 17 | 10000 | |
| 07.12.2017 | VTA தொழிற்கல்வி நிறுவனத்திற்கு நிர்வாக சபையால் அனுமதிக்கப்ட்ட கொடுப்பனவு 01 | | | | 63530 | |
| 29.12.2017 | VTA தொழிற்கல்வி நிறுவனத்திற்கு நிர்வாக சபையால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு 02 | | | | 127720 | |
| ☛ குறிப்பு | கொடுப்பனவு 02 இரு வெவ்வேறு நன்கொடையாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. | | | | | |
| | இறுதி இருப்பு வங்கி | | | | 452851 | 74 |
| | காசு | | | | 00 | 00 |
| | | 755413.11 | | | 755413.11 | |

வல்லை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் 01.01.2017 - 31.12.2017 வரையான காலப்பகுதிற்கான கணக்குகளை வரவுப் பற்றுச்சீட்டு வங்கிப்புத்தகம் செலவுறுதிச் சிட்டைகள் என்பவற்றின் உதவியுடன் பரிசீலித்து மேற்குறித்த கணக்குகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டிருப்பதினை உறுதிப்படுத்துகின்றேன்.

T. சுந்தரமூர்த்தி
(பொருளாலர்

31.12.2017

ஆ. நாகலிங்கம்
(கணக்காய்வாளர்)

எமது சங்கத்தின் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை வருடாந்தம் எமது கணக்குகளை எண்பார்வை செய்து (Audit) ஒத்தழைப்பும் வழிகாட்டலும் நல்கிய ஓய்வு பெற்ற கூட்டுறவு சங்கப்பரிசோதகர் (Co-operative inspector) திரு. A. நாகலிங்கம் அவர்களிற்கு எமது நன்றியறிதல்களையும் பாராட்டுக்களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணைத்தலைவர்
கப்டன் R. இராஜேந்திரா

செயலாளர்
V.P பாலேந்திரன்

**வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் (VaiSWa)**

**முத்துமாரி அம்மன் திருவிழாக்கால ஒன்று கூடல் 14.05.2017**

**<u>வரவு செலவு அறிக்கை</u>**

**வரவு**

| | | |
|---|---|---|
| 1. | Capt.R. இராஜேந்திரா | 10, 000 |
| 2. | T. வெற்றிவேல் | 5, 000 |
| 3. | V.P. பாலேந்திரன் | 5,000 |
| 4. | T. சண்முகதாஸ் | 5, 000 |
| 5. | V. கிருஷ்ணமூர்த்தி | 4, 000 |
| 6. | M. குகநேசன் | 2, 000 |
| 7. | R. யோகன் | 2,000 |
| 8. | Capt. A. ரவீந்திரதாஸ் | 2, 000 |
| 9. | Capt. S. சிவனேசன் | 2, 000 |
| 10. | M. பத்மநாதன் | 1, 000 |
| 11. | T. சுந்தரமூர்த்தி | 1, 000 |
| 12. | P. சிவஞானசுந்தரம் | 1, 120 |
| | மொத்தம் | 40, 120 |

**செலவு**

| | | |
|---|---|---|
| 1. | உணவு, குளிர்பானங்கள் இன்ன பிறவும் | 37620 |
| 2. | ஒலி பெருக்கி | 2,500 |
| | மொத்தம் | 40, 120 |

இந்த இரவுப் போசனவிருந்தின் இறுதியில் சங்க சர்வதேச இணைப்பாளர் திரு. N. சிவரட்ணம் அவர்களால் குளிர்களியும் (ice cream) வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| .................................. | .............................. | .............................. |
| இணைத்தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| கப்டன் R. இராஜேந்திரா | V.P பாலேந்திரன் | T. சுந்தரமூர்த்தி |

# சமகால கல்வி, தொழில் நடப்பு நிலை ஒரு கண்ணோட்டம்

பொதுவாகவே ஒரு சமூகத்தின் வளர்ச்சியும் எழுச்சியும் அதன் அரசியல் தலைமைத்துவம், பொருளாதார அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு, கலாச்சார அபிவிருத்தி போன்றவற்றிலேயே தங்கியுள்ளது. ஆனால் அதற்கும் மேலாக இவை பற்றிய சரியான புரிந்துணர்வும், விழிப்புணர்வும் சரியான வழிகாட்டலும் பிரதானமாகத் தேவைப்படுகின்றது. இதற்கு சரியான நடைமுறை யதார்த்தத்தை புரிந்து கொண்டு, நடப்பை ஏற்றுக் கொண்டும், நினைப்பை நிஜம் என்று நம்பியிராதும் நேர்மறை/ உடன்பாடான விமர்சனங்களை மாத்திரம் ஏற்றுக்கொள்ளாது எதிரான விமர்சனங்களிற்கு முன்னுரிமை கொடுத்தும் அதனைச் சீர்தூக்கிப்பார்த்து குறைகளைக்கண்டறிந்து அதனை ஏற்றுக் கொள்கின்றதும், அதனைத் திருத்திக் கொள்ள முனைவது தான் ஒருவன் தன்னை முன்னேற்றிக் கொள்ள முடியும். இது தனி ஒருவனிற்கு மாத்திரமின்றி அவன் சார்ந்துள்ள சமூகத்திற்கும் பொருந்தும். அடக்கி ஒடுக்கப்பட்டு எல்லா வழிகளிலும் பின் தள்ளப்பட்ட இனங்கள் சரியான தலைமைத்துவத்தினாலும் வழிகாட்டலினாலும் முறையான கல்வி, தொழில் துறை பற்றிய அறிவு புகட்டப்பட்டதினாலும் அவர்கள் தம்மை, தமது பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொண்டதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

நாமும் மேலே சொல்லப்பட்ட மாதிரியான இனம் தான் என்று சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை. எமது ஊரின் பல துறை வளமும் அபிவிருத்தியும், முன்னேற்றமும் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தின் வளர்ச்சியில் ஓர் அங்கமே, நாம் சரியான, காலத்திற்கு ஏற்றவாறான கல்வித்துறையைத் தேர்ந்தெடுக்கின்றோமா என்று எம்மை நாமே கேட்க வேண்டிய தேவை உள்ளது. வெறுமனே ஒற்றை இலக்க விகிதத்தினர் மாத்திரமே உள்வாங்கப்படும் அரச பல்கலைக் கழகப்பட்டத்தை இலக்கு வைத்துத்தான் நாம் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கைத்தீவில் தமிழ் மாணவர்கள் தான், சரியாகச் சொல்வதென்றால் தமிழர்கள் தான் புத்திசாலிகள் கல்வி ஆற்றலில் வல்லவர்கள் என்றமையால் தான் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுவதைத் தடுக்கவேண்டும் அதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை நசுக்க வேண்டும் என்று பல்கலைக்கழக அனுமதியில் இன விகிதாசார முறை என்ற தரப்படுத்தல் எனும் ஒரு வகைப்படுத்தல் அறிமுகம் செய்திருந்தனர் அன்றைய ஆட்சியாளர்கள் . அன்றும் இன்றும் அரசினால் கொண்டு வரப்பட்ட சட்டங்கள், திட்டங்கள் அனைத்தும் எமது இனத்தை ஒடுக்கு வதிலேயே குறியாக இருந்து வருகின்றன. அன்றைய காலத்தில் பல்கலைக்கழகம் புகுந்து பட்டம் பெறுபவர்கள் அனைவர்க்கும் அரச வேலை கிடைத்தது ஒரு ஆறுதலான விடயம். ஆனால் இன்றோ அப்படி இல்லை. வேலையில்லாப் பட்டதாரிகள் நியமனம் கோரி ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளனர். மாறாக அன்று மாதிரியல்லாது இன்று பல்கலைக்கழக பட்டதாரியாகாவிட்டாலும் அதற்கிணையான பட்டங்களை வெளிவாரியாகப் படித்துப் பெறுவதற்கு வழிகளும் வழிகாட்டல்களும் இன்று நிறையவே இருக்கின்றன. இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையானது பலதரப்பட்ட தொழிற்பயிற்சிக்கல்வியை முற்றிலும் இலவசமாக வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியிலும் பல தரப்பட்ட காலத்திற்குத் தேவையான பெறுமதிமிக்க கற்கை நெறிகள் இலவசமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. அங்கு வகுப்புக்களிற்கு சமூகமளிக்கும் மாணவர்களிற்கு நாளொன்றிற்கு ஐம்பது ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரச சமுத்திர பல்கலைக்கழகமும் பலதரப்பட்ட சர்வதேச அங்கீகாரமுள்ள கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக நடாத்தி வருகின்றது. அதுனுடைய பிராந்திய நிலையமொன்றும் யாழ் நகரில் இரண்டாவது குறுக்குத் தெருவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.ஆனால் எம்மில் ஒரு சாரார் தெரிந்திருந்தும் அரச பல்கலைக் கழகப்பட்டம் என்ற மாயையிலும் , இன்னொரு பிரிவினர் கால விரயத்தைத் தவிர்க்கும் தொழிற்பயிற்சிக் கல்வி முறை பற்றி அறியாதவர்களாகவும், மீதிப்பேர் அறிந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் பொன்னான காலத்தை வீணடிக்கின்றனர். குறித்த யாழ் அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் வெளி மாவட்ட மாணவர்களையே அதிகம் காணக்கூடியதாகவுள்ளது ஒரு கவலையான விடயம். எம்மவரின் அலட்சியம் தொடரலாமா?

**நடப்பில் :-**

1. கப்பல் தொழில் வாய்ப்பில் புதிது புதிதாக காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்படும் கற்கை நெறிச்சான்றிதழ் (course certificate) அதற்குண்டான செலவினங்களும் அலைச்சல்களும் இன்னும் இந்த ஆண்டறிக்கையின் முகப்பில் காட்டப்பட்ட விடயங்களும் சில கப்பல் தொழில் வழங்கும் முகவர்களிடம் பெறும் கசப்பான அனுபவங்களும் இன்னும் பிறவும் வரவு எட்டணா செலவு பத்தணா என்ற கதையாக விருக்கின்றது. எனவே இதனைத் தொடர்ந்தும் நம்பியிருக்க முடியாது. நம்பியிருப்பதும் அர்த்தமற்றது.

2. மீன் பிடித்தொழிலை எடுத்துக் கொண்டால் அதிலும் அந்நியரின் அத்து மீறல்களும் அவர்கள் பாவிக்கும் தடைசெய்யப்பட்ட வலைகளும் மீன் வளத்தை வழித்துத் துடைத்து எடுத்து விடுகின்றன. காலப்போக்கில் மீன்பிடித்தலும் கேள்விக்குறியாகக் கூடும் எனவே மக்கள் குறிப்பாக இன்றைய மாணவர்கள், இளைஞர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதனை ஏற்றுக் கொண்டு தமது கவனத்தை முறையான கல்வி முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெற்றி இலக்கை விரைவில் எட்டிப்பிடிக்க வேண்டும். தொழில்கள் என்று வரும் போது அதில் ஏற்றத்தாழ்வைப்பாரது "உழைப்பவரே உயர்ந்தோர்" என்ற கருத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ஊரின் தொழில் வழங்குநரிடத்தில் வேலை செய்யும் எம்மவர் ஒரு சிலரே என்பதும் இங்கு நோக்கத்தக்கது. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது (VTA) நடாத்தும் தேசிய தொழில் தகமை (NVQ) முழுநேர கற்கை நெறிகள் அனைத்தும் இலவசமானவை, சர்வதேச அங்கீகாரமுள்ளவை. அத்துடன் இது திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் முற்று முழுதான ஒரு அரச நிறுவனமாகும். அரச பள்ளிகள், கல்லூரிகளில் இருக்கும் நடைமுறைகள் சட்டங்களும் அனைத்தும் இதற்கும் உண்டு ஒரு அரிய வரப்பிரசாதமாக கிடைத்தது இந்த வல்வை நிலையம் இதனை நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் பிரயோசனம் மிக்க கற்கை நெறிகளை இங்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் விரிவுபடுத்துவதோடு ஒட்டு மொத்த எம்மக்களிடையே சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை எம்மிடையே எழுந்துள்ளது. மேலே சொல்லப்பட்ட விடயங்கள் பலராலும் பல சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டவையே இருந்த போதிலும் சமூக அக்கறை கருதி நாமும் இதனை இன்னுமொரு தடவை இங்கு பதிவு செய்கின்றோம்.

மாலுமிகள் நலன்புரிச்சங்கத்திற்கும் மேலே காட்டப்பட்ட விடயங்களிற்கும் எந்த வித தொடர்பும் இல்லையென்று புறந்தள்ளிவிடவும் இயலாது. வல்வை மாலுமிகள் நலன் புரிச்சங்கமும் வல்வைப் பொது மக்களில் ஓர் அங்கமே. அவர்களின் வாழ்கைத் தரமுயர்விலும், வளர்ச்சியிலும் எழுச்சியிலும் எமக்கு கரிசனை நிறையவேயுண்டு. திறன்மிகு ஆற்றல், கொள்கை, திட்டமிடல், செயற்றிறன் இவை நான்குமே எம்மை முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும்.

மிகவும் பெரிய பாரம்பரியத்திற்கும் சாதனைகளிற்கும் சொந்தக்காரர் நாம் வெறுமனே அவற்றையே பேசிக்கொண்டிருக்காது சரியான தலைமைத்துவத்தின் கீழ், குறிச்சி வேறுபாடுகளை மறந்து தேவைப்படுமிடத்தில் பரஸ்பர விட்டுக்கொடுப்புணர்வுடன் செயல்பட வேண்டிய தேவை எம்மிடையே எழுந்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது. அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளில் பிரதானமானது கல்வி அடுத்து விளையாட்டு. காலத்திற்கு ஏற்ற கல்வி முறையைத் தேர்வு செய்வது பிரதானமானது. அதற்கு இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் தேசிய தொழில் தகமை கற்கை நெறிகள் மிகப் பொருத்தமானவை. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ் மாவட்டக் காரியாலயமும் அதன் உத்தியோகத்தர்களும் எமக்கு வேண்டிய உதவிபுரிய ஆர்வமாகவுள்ளார்கள். நாமும் அதனைப் பயன்படுத்திக் கொள்வோம். இனிவரும் காலங்களில் அனைத்துத்துறைகளிலும் எமது ஊரும், மக்களும் ஏற்றம் காணவேண்டும். நிச்சயமாகக் காண்பார்கள் என்று எதிர்பார்கின்றோம்.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"**

நன்றி

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்
(Vai SWA)

18.04.2018

## <u>யாழ்ப்பாணத்தில் தொழிற்கல்வியும் இளைஞர்களும்</u>

தொழிற்கல்வியானது பாடசாலையை விட்டு இடை விலகிய மற்றும் உயர்கல்வி தொடர்வதற்கான வாய்ப்பினை வெட்டுப்புள்ளியினால் இழந்த மாணர்களின் எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு நாட்டின் திறன் மிக்கவர்களை உருவாக்கி நாட்டினை பொருளாதார ரீதியாக மேம்படுத்தும் நோக்கத்துடன் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்பயிற்சி ரீதியானகல்வி முறையாகும்.

அரசினால் அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சிக் கல்வி நிலையமாக திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையும் ஒன்றாகும். இத்தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ் மாவட்டத்தில் மாவட்டக் காரியாலயம் (இல12/4,வீரசிங்க மண்டபம் கே.கே.ஸ் வீதி, யாழ்ப்பாணம்) மற்றும் எட்டு தொழிற்பயிற்சி நிலையங்களையும் கொண்டு இயங்குகின்றது. எமது தொழிற்பயிற்சி நிலையங்களில் மொத்தமாக 50 தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் நடாத்தப்பட்டுவருகின்றன. இப்பயிற்சி நெறிகளுக்கு NVQ அடைவு மட்டத்தில் 6மாதம், 1வருட காலத்தினை கொண்டதாக ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் தொழிலுக்கான திறன் நிலைப்படுத்தப் படுகின்றது.

NVQஎன்பதன் விரிவாக்கம் National Vocational Qualification System அதாவது தேசிய தொழில் தகைமை முறையாகும். பாடசாலைக் கல்விப் பாடதிட்டத்தில் மாணவர்களின் தகைமையை O/L, A/L என்றும்B.A, B.SC, B.Com, B.Techஎன்றும் மாணவர்களின் கல்வியில் திறன் அடைவு மட்டம் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அதே போன்று தொழிற்பயிற்சித்துறையிலும் மாணவர்களின் திறன் அடைவு மட்டத்தினையும் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பலவும் (NVQ) படிமுறைக்கேற்ப வாழ்க்கை தொழில்திறன்களை வகைப்படுத்தி அம்முறைகளைப் பயன்படுத்தி வருவதுடன் அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியையும் அடைந்துள்ளளன.

கல்வியியலில் மாணவர்களின் அடைவு மட்டம் O/L, A/L பட்டப்படிப்புகள் என படிப்படியாக உயர்ந்து செல்வது போல தொழிற்துறையில் NVQசான்றிதழ் ஆனது பட்டதாரி மட்டம்வரை காணப்படுகிறது. இம்முறை அதாவது தொழில்சார் பயிற்சிகளுக்கும் பயிற்சி நெறிகளுக்கும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பாடவிதானம் அடங்கிய முறைமை தேசிய தொழில்தகைமை முறைமையாகும்.

இவ்வாறு தேசிய ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடைவுமட்டம் 7 படிநிலைகளை கொண்டதாக மாணவர்களின் திறன்கள் NVQவினால் அளவீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு திறன்கள் மிக்க மாணவர்களாக இளைஞர் யுவதிகள் எமது பயிற்சி நிலையங்களில் இருந்து பல்வேறுபட்ட துறை ரீதியாக சான்றிதழ்களைப் பெற்று வெளியேறுவதோடு சான்றிதழ் மட்டம் பூர்த்திசெய்யப்படும். தொடர்ந்து டிப்ளோமா மட்டம் (NVQ 5) உயர்டிப்ளோமா (NVQ6) என

டிப்ளோமா மட்டம் பூர்த்தியடைய தொடர்ந்து பட்டதாரி மட்டம் (NVQ7) ஆக காணப்படும். சான்றிதழ் மட்டத்தை பூர்த்தி செய்த மாணவர்கள் வெளிநாட்டு உள்நாட்டு வேலை வாய்ப்புக்களையும் பெற்று தமது வாழ்க்கையினை தடம்பதித்து கொள்கிறார்கள்.

தற்போது நாட்டில் வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கை அதிகரித்து பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஆகவே அன்பான எமது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எமது இளைஞர் யுவதிகளே உங்களுக்குள் திறமை ஆற்றல் அறிவு புதைந்துள்ளது. எனவே பொருத்தமான பயிற்சி நெறிகளினை தெரிவு செய்து பயிற்சியை பூர்த்தி செய்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களினைப் பெற்று உமது வாழ்க்கையினை திறம்பட அமைத்துக் கொள்ளவதுடன் அதாவது கல்வியில் பட்டம் பெற்றவர்கள் பலர் வேலைவாய்ப்பு வளங்கப்படாமல் பலபோராட்டங்களை நடாத்தி வருவது யாவரும் அறிவீர்கள். ஆனால் தொழில்கல்வியில் சாதாரண சான்றிதழ் மட்டத்தை பூர்த்தி செய்தவர்கள் மிக இலகுவாக நிரந்தர வேலையில் ஈடுபட்டு வருவதை எம்மால் யாழ் மாவட்டத்திலேயே கண்டு கொள்ளமுடியும். எனவே மாவட்டத்தின் தொழில் வல்லுனராக மாறவும் யாழ் மாவட்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது எப்போதும் உங்களை வரவேற்கிறது.

இவ் அங்கீகரிக்கப்பட்ட தொழில் கல்வியை எங்கும் பெற்றுகொள்ள முடியாது. அதாவது எமக்கு முறைசார்ந்த கல்வி முறைமையில் O/L, A/L சான்றிதழை பெற்றுக்கொள்ள அரசபாடசாலை உள்ளதோ அதேபோல தொழில்கல்விக்கும் மூன்றாம் நிலை தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் மாத்திரமே மேற்கொள்ளல் மிகமுக்கியமானது. அவ்வாறில்லாத சந்தர்பத்தில் அங்கீகார முடைய சான்றிதழையோ அல்லது முறையான பயிற்சியையோ பெறமுடியாது.

இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் முன்னிலையில் உள்ள நிறுவனமே இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (Vocational Training Authority of Srilanka ) **VTA** ஆகும்.

இந்த அரச இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை தற்போது அனைத்து பாடநெறிகளையும் இலவசமாக நடாத்தி வருவது இளைஞர் யுவதிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

மேலும் பாடசாலை கல்வித்தகைமையை பெற தவறியவர்களையும், வாய்ப்பை இழந்தவர்களையும் தன்னுடன் அரவணைத்துக் கொண்ட தொழில்கல்வி அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை தொழிலிலில் வளங்க தவறவில்லை. கல்விமட்டத்தை தொழில்கல்விக்கு ஈடானதாக தொழில் தருணர்கள் உறுதிப்படுத்த அங்கீகாரம் வளங்கியுள்ளது.


அதாவது

O/L = NVQ 3

A/L = NVQ 4

வாழ்க்கைக்கு ஆற்றல் ஆற்றலுக்கு தொழில்

# எமது பயிலுனருக்கான முன்னேற்ற பாதை







சரியானதை செய்வோம் அதுவும் சரியாக செய்வோம்